කළමනාකරණ සේවා දෙපාර්තමේන්තුව

முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

# Department of Management Services

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## Annual Performance Report

## 2014

මහා භාණ්ඩාගාරය, කොළඹ - 01

பொதுத் திறைசேரி, கொழும்பு - 01

General Treasury, Colombo - 01

# முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2014
## பொதுத் திறைசேரி
## கொழும்பு - 01


தொலைபேசி : 011 -2484757

தொலைநகல் : 011-2430270

மின்னஞ்சல் : dgms@msd.treasury.gov.lk

## நோக்கு

அரச துறையின் பதவியணி முகாமை, ஊதிய முகாமை மற்றும்
ஆலோசனைச் சேவை தொடர்பான முன்னணி
அரச நிறுவனமாகத் திகழ்தல்

## எமது பணி

அரசாங்க சேவையை உன்னத தரத்தில் கொண்டு நடாத்துவதற்கு
அவசியமான முகாமைத்துவ உதவிகளை அரசாங்க
நிறுவனங்களுக்கு வழங்குதல்

## பணிப்பாளர் நாயகத்திடமிருந்து....

அரச துறையின் பல்வேறு துறைகளில் காலத்துக் காலம் எழுகின்ற மனித வளத் தேவைகளையும் நாட்டின் பொருளாதாரத் தேவைகளையும் கவனத்தில் எடுத்து அரசாங்கத் துறையில் போதிய பதவியணி எண்ணிக்கையைப் பேணி வரும் சவால்மிக்க பணிக்கு 2014 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக முகங்கொடுக்க முடிந்தது.

புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் திட்டமிட்டுள்ள துரித பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி இலக்குகளை அடையப்பெறும் செயற்பாட்டில் அரசாங்க சேவைகளை வினைத்திறனுடன் வழங்கி அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கும் பொது மக்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் சரியானதும் வினைத்திறன்மிக்கதும் நட்புறவானதுமான சேவையினை வழங்கக்கூடியவாறு அரசாங்க சேவையின் மனித வளங்களை மிகவும் பொருத்தமான முறையிலும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் முகாமை செய்தலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அடிப்படைப் பணிகளாக விளங்குகின்றன. அதற்கிணங்க, 2014 ஆம் ஆண்டு, மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு கூடுதலான பங்களிப்பை வழங்க முடிந்த ஒரு வருடம் என மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள முடியும்.

எமது திணைக்களத்தின் பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்காக உரிய வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பையும் வழங்கிய நிதி, திட்டமிடல் அமைச்சினதும் திறைசேரியினதும் செயலாளர் அவர்களுக்கும், திறைசேரியின் பிரதிச் செயலாளர்களுக்கும் சகோதரத் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தேவையான சந்தர்ப்பங்களில் உரிய அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஒத்துழைத்த தேசிய சம்பள ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கும் முக்கியமான பணிகளில் ஒத்துழைத்த நிதி ஆணைக்குழு மற்றும் அனைத்து நிரல் அமைச்சுக்களின் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் குழு உணர்வுடனும் ஒத்துழைப்பு மனப்பான்மையுடனும் திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றிய ஊழியர் குழாத்துக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என். கொடகந்த
பணிப்பாளர் நாயகம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 1 |
| 2. பதவியணி முகாமை | 3 |
| 3. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் முகாமை | 9 |
| 4. ஆய்வுச் செயற்பாடுகள், தகவல் மற்றும் தரவுத் தொகுதி | 10 |
| 5. தாபனப் பிரிவு | 13 |
| 6. நிதிப் பிரிவு | 21 |

அட்டவணை

| | |
|---|---|
| I. நிர்வாகக் கட்டமைப்பு | 23 |

# 1. அறிமுகம்

## 1.1 தோற்றம்

நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் முதலாம் தரத்திலான திணைக்களமாக 1999 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டங்களில் அரச துறையின் ஊழியர் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவன மட்டத்தில் அவசியமான பதவியணியினை இனங்காணுதல், அவ்வாறு இனங்காணப்படும் பதவிகளுக்கான சம்பளங்கள் தொடர்பில் சிபாரிசுகளை முன்வைத்தல், ஆட்சேர்ப்பு/ தரமுயர்வு நடைமுறைகளுக்கு அனுமதி வழங்குதல் போன்ற செயற்பாடுளின் ஊடாக அரச துறையின் மனித வளங்களை முகாமைசெய்வதற்கு இத்திணைக்களம் உச்ச அளவில் பங்களிப்பு வழங்கியுள்ளது. இதன் போது நாட்டின் நிதி நிலைமை, அபிவிருத்திப் போக்குகள், திறமைகள் நிரம்பிய அரச சேவையை உருவாக்குதல் போன்ற துறைகளில் குறிப்பாகக் கவனம் செலுத்துவது அத்தியவசியமாகக் காணப்பட்டது. இதற்காக, தேவையைப் பொறுத்து, உரிய ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பதவியணி மீளாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் அரச துறைக்கு அவசியமான சிறந்த மனித வளங்களைப் பேணி வருவதற்கு திணைக்களம் பாரியதொரு பங்களிப்பை வழங்கியுள்ளது.

## 1.2 குறிக்கோள்கள்

மிகவும் பயனுறுதிவாய்ந்த மனித வளத்தை அரசாங்க சேவையினுள் உருவாக்குவதற்கான பல குறிக்கோள்களை இலக்காகக் கொண்டு இத்திணைக்களம் இயங்கி வருகின்றது.

i. அரசாங்க சேவையின் பதவியணி முகாமை
ii. தேசிய சம்பளக் கொள்கைகளுக்கு இணங்க சம்பளங்களையும் படிகளையும் தீர்மானித்தல்.
iii. அரசாங்கத் துறை ஊழியர்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

## 1.3 வகிபாகம்

(i) தேசிய சம்பள ஆணைக்குழுவுக்கு/அதன் துணை நிறுவனங்குக்குச் சேவைகளை வழங்குதல்.
(ii) அரச துறையில் மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துதலும் அவை தொடர்பான ஆய்வுகளை நடாத்துதலும்.
(iii) பணிகள், குறிக்கோள்கள், முறைமைத் தொகுதி, நடைமுறைகள், பதவியணி என்பன தொடர்பான தாபன ரீதியான மீளாய்வுகளை நடாத்தி உரிய அதிகாரிகளுக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.

(iv) அரசாங்க நிறுவனங்களை மீள் கட்டமைப்பதையும் உரிய அளவில் அமைப்பதையும் நோக்காகக் கொண்டு அரசாங்கத் துறை நிறுவனங்களின் இரட்டைத் தன்மைப் (Duplicating) பணிகளை அடையாளம் காணுதல்

(v) அரசாங்கத் துறையின் வினைத்திறன் மற்றும் பயனுறுதியை உறுதிப்படுத்தும் குறிக்கோளை முன்னிறுத்தி நிறுவன ரீதியான மற்றும் பதவியணி தொடர்பான மீளாய்வுகளை மேற்கொள்ளுதல், முறைமைத் தொகுதிகளை மேம்படுத்துதல், ஒழுங்குக் கட்டமைப்புக்களை உருவாக்குதல் மற்றும் பலப்படுத்துதல்.

(vi) ஊழியர் எண்ணிக்கைத் தேவைப்பாடுகள் தொடர்பான அங்கீகரிக்க்பட்ட அளவீடுகளையும் தரநியமங்களையும் உருவாக்குதல்.

(vii) மேலதி ஊழியர் தொகைகளை அடையாளம் கண்டு, அவர்களை மீண்டும் பொருத்தமானவாறு சேவையில் ஈடுபடுத்துதலும் ஊழியர் குறைப்பு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தலும்.

(viii) பௌதிகச் சூழலை மேம்படுத்துவதற்கான தேவைகள், இயந்திர மயப்படுத்தல்/ கணனிமயப்படுத்தல் மற்றும் சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் என்பவற்றுக்கான துறைகளை அடையாளம் காணுதல்.

(ix) அபிவிருத்தித் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் சேவை நிபந்தனைகளையும் மீளாய்வு செய்யும் ஆய்வுகளில் ஈடுபடுதலும் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தலும்.

(x) அரச துறையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் அமர்த்துதல், ஆலோசகர்களைப் பணிக்கமர்த்துதல் தொடர்பான முன்மொழிவுகளை ஆராய்ந்து சிபாரிசுகளை முன்வைத்தல்.

(xi) அரச மற்றும் மாகாண அரச சேவைகளின் பதவியணி தொடர்பான தகவல் தொகுதிகளைப் பேணிவருதல்.

(xii) ஆட்சேர்ப்புக் கொள்கைகள், திறன் விருத்திப் பயிற்சி மற்றும் பதிலீட்டுத் திட்டமிடல் என்பன தொடர்பான ஆய்வுகளிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் உரிய அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

(xiii) அரசாங்கத் துறையில் சம்பளம், மிகை ஊதியம், ஊக்குவிப்புத் திட்டங்கள், நலன்புரித் திட்டங்கள் மற்றும் வேறு ஊதியம் தொடர்பான தொகுதிகளை முகாமை செய்தலும் அரச துறையில் அதி விசேட நலன் திட்டங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதலும் சிபாரிசுகளை வழங்குதலும்.

# 2. பதவியணி முகாமை

அரசாங்கத் துறையின் மனித வள முகாமையில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வகிபாகம் பின்வரும் செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

- புதிய பதவிகளுக்கு அனுமதி வழங்குதல்
- பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குதல்
- பதவிகளை இல்லதொழித்தல்.
- பதவிப் பெயர்களைத் திருத்துதல்
- அரசாங்கச் செயற்திட்டங்களுக்கான முகாமைத்துவப் பதவியணிக்கு அனுமதி வழங்குதலும் சம்பளங்களைத் தீர்மானித்தலும்
- அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பணிகளின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களுக்கான அங்கீகாரம் வழங்குதல்.

அரச துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை உரிய விதத்தில் மேற்கொள்வதற்கு, தேவையான சிறந்த மட்டத்தில் ஊழியர் எண்ணிக்கையைப் பேணி வருவது அவசியமாகும். அதனடிப்படையில், அமைச்சுக்கள், திணைக்களம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க தொழில்முயற்சிகள் என்பவற்றில் காலத்துக் காலம் எழுகின்ற மனித வளத் தேவைகளையும் நாட்டின் பொருளாதார இலக்குகளையும் கவனத்தில் எடுத்து நிறுவனங்களில் போதியளவு ஊழியர் எண்ணிக்கையைப் பேணி வருவதற்கான தனது பணிகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது.

## 2.1 அரச சேவை ஊழியர்களும் துறைசார் கட்டமைப்பும்

2014.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான அரச துறை ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1,302,258 ஆகும். அமைச்சுக்கள், திணைக்களங்கள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட அரச தொழில்முயற்சிகள் மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் படைகள் என்பவற்றைக் கொண்ட அரச துறையின் மொத்த ஊழியர் குழாத்தின் உள்ளடக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 01 அரச துறை ஊழிர்கள் - 2014

| நிர்வாக மட்டம் | அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதி | தற்போதைய பணியாட்தொகுதி |
|---|---|---|
| தேசிய மட்டம் | 844,948 | 703,600 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 392,698 | 377,445 |
| மொத்த அரசாங்க ஊழியர்கள் | **1,237,646** | **1,081,045** |
| அரச தொழில்முயற்சகள் மற்றும் வங்கிகள் | 245,339 | 221,463 |
| மொத்த அரசாங்க ஊழியர் துறை | **1,482,985** | **1,302,258** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 2.2 அரசாங்க சேவையின் பணியாட்தொகுதி முகாமை - 2014

பொது மக்களுக்கு வினைத்திறன்மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமான அரச சேவையினை வழங்கும் நோக்கிலும் புதிய அரச கொள்கைகளுக்கு இணங்க பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கிலும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்ட அரசாங்கத் துறையில் 2014 ஆம் ஆண்டில் போதியளவில் ஊழியர் எண்ணிக்கைப் பேணி வருவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க அரசாங்க சேவையிலுள்ள பதவிகள் சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இடைநிலை, ஆரம்பநிலை என நான்கு மட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. சேவை மட்டங்களின் அடிப்படையில் அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை வகையீடு அட்டவணை இல. 02 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 02 சேவை மட்டங்களின் அடிப்படையில் அரசாங்க சேவையின் ஊழியர் எண்ணிக்கை வகையீடு

| நிர்வாக மட்டம் | சேவை மட்டம் | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | சிரேஷ்ட | மூன்றாம் நிலை | இடை நிலை | ஆரம்பநிலை | |
| தேசிய | 26,251 | 24,760 | 692,825 | 180,977 | 924,813 |
| மாகாண சபைகள் | 13,781 | 15,463 | 236,789 | 61,423 | 327,456 |
| உள்ளூராட்சி நிறுவனங்கள் | 1049 | 882 | 15,798 | 32,260 | 49,989 |
| மொத்தம் | 41,081 | 41,105 | 945,412 | 274,660 | 1,302,258 |
| சதவீதம் (%) | 3% | 3% | 72% | 22% | 100% |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

முகாமைத்துவ மட்டத்திலான பொறுப்புக்களைக் கொண்டுள்ள பொறியியலாளர்கள், நீதிமன்ற, சட்ட, வைத்திய அதிகாரிகள் மற்றும் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட மட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். அவர்களின் எண்ணிக்கை மொத்த ஊழியர் எண்ணிக்கையில் 3 சதவீதமாகும். மேற்பார்வைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறைவேற்றுத்தரத்திற்கு உதவி வழங்கும் நிர்வாக, திட்டமிடல், கணக்கீட்டு, வழிநடாத்தல், வரி மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களும் மொழிபெயர்ப்பாளர்களும் மூன்றாம் மட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இவர்களும் முழு அரச துறையில் 3 சதவீதத்தினராவர். அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,

முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், தாதிமார், ஆசிரியர்கள் முப்படைகளின் படைவீரர்கள், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் போன்ற உத்தியோகத்தர்களைக் கொண்ட இரண்டாம் மட்டத்தினர் மொத்த அரச சேவையில் 72 சதவீத பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளனர். கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளை நாடளாவிய ரீதியில் வழங்குவதற்கான ஆசிரியர்களும் தாதிமார்களும் நாட்டில் கிராமங்களை மையமாகக் கொண்டு சேவை வழங்குதல் மற்றும் கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான நீட்சி உத்தியோகத்தர்களும் கள உத்தியோகத்தர்களும் அரச ஹேவையில் அதிகளவில் காணப்படுவதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். முழு அரச துறையினதும் ஊழியர் எண்ணிக்கையில் 22 சதவீதத்தை சாரதிகள், அலுவலக உதவியாளர்கள் போன்ற ஊழியர்களைக் கொண்ட ஆரம்ப மட்டத்திலுள்ள பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

### 2.2.1 புதிய பதவிகளை உருவாக்குதல் - 2014

புதிதாகப் பதவிகளை உருவாக்குகின்ற போது நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணி, நாட்டின் நிதி நிலைமை மற்றும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள், பதவிகளை ஏற்படுத்துவதற்கான காலத்தின் தேவை என்பன கவனத்திற் கொள்ளப்படுகின்றன. அரசாங்க துறைக்கான பதவிகளைப் புதிதாக உருவாக்குவது தொடர்பாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் மட்டத்தில் செய்யப்பட்ட வகைப்படுத்தல் 2011-2014 காலப் பகுதிக்கான ஒப்பீட்டு ரீதியான தகவல்களுடன் கீழே அட்டவணை 03 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இல. 03 புதிய பதவிகளை உருவாக்குதல்

| நிறுவனம் | 2011 | | 2012 | | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பதவிகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவிகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவிகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவிகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) |
| அமைச்சு/ திணைக்களம் | 2,893 | 73.3 | 38,368 | 78.1 | 15,315 | 77.0 | 5326 | 50 |
| மாகாண சபைகள் | 523 | 13.2 | 8,572 | 17.4 | 3,093 | 16.0 | 3926 | 37 |
| நியதிச்சட்ட சபைகள் | 534 | 13.5 | 2,217 | 4.5 | 1,330 | 7.0 | 1422 | 13 |
| மொத்தம் | **3,950** | **100** | **49,157** | **100** | **19,738** | **100** | **10674** | **100** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

இதற்கிணங்க 2014 ஆம் ஆண்டிற்காக உருவாக்கப்பட்ட புதிய பதவிகளில் 50 சதவீதமானவை அமைச்சுக்களுக்காகவும் திணைக்களங்களுக்காகவும் உருவாக்கப் - பட்டவையாகும்.

### 2.2.2 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதிவழங்குதல் - 2014

06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள PL, RS, MN, MT, GE,SL ஆகிய சம்பள முறைகளுக்குரிய அரசாங்க சேவைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட மாகாண அரச சேவையிலுள்ள் உத்தியோகத்தர்கள் பதவியுயர்வு பெறுவதனால்/ ஓய்வுபெறுவதனால்/பதவி விலகுவதனால்/ மரணிப்பதனால் ஏற்படக்கூடிய பதவி வெற்றிடங்களை நிரப்பும் பணியை முகாமைத்துவ ஹேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தான தத்துவங்களைப் பயன்படுத்தி நிரல் அமைச்சுக்களின் செயலாளர்களின்/ மாகாண பிரதம செயலாளர்களின் முன் அனுமதியின் அடிப்படையில் மேற்கொள்ள் 03/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்குள் உள்ளடங்காத பதவிகளை நிரப்ப வேண்டுமாயின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெறுவது அவசியமாகும். அதற்கிணங்க சேவைக்கான தேவை தொடர்பில் கவனம் செலுத்தி, 2014 ஆம் ஆண்டினுள் அமைச்சுக்கள் திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பவற்றிடமிருந்து கிடைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் 7,664 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இத்திணைக்களம் அனுமதி வழங்கியது.

அட்டவணை இல. 04 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குதல் - 2014

| நிறுவனம் | எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| அமைச்சுக்கள் | 5349 | 70% |
| திணைக்களங்கள் | 710 | 9% |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | - | - |
| நியதிச்சட்ட நிறுவனங்கள் | 1604 | 21% |
| மொத்தம் | **7663** | **100** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

### 2.2.3 பதவிகளை இல்லாதொழித்தல் மற்றும் பதவிப் பெயர்களைத் திருத்துதல்

அரசாங்கத் துறையின் பதவியணி முகாமையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வகிபாகம், நிலவும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக அனுமதி வழங்குதல், புதிதாகப்

பதவிகளை உருவாக்குதல் என்பவற்றால் மட்டுப்படுத்தப்பட்டதன்று. அரசாங்க நிறுவனங்களில் பயனுறுதியும் காலத்துக்குப் பொருத்தமான தன்மையும் இல்லாத பதவிகளை அடையாளம் கண்டு, உரிய திணைக்களங்களின் உடன்பாட்டுடன் அப்பதவிகளை இல்லாதொழித்தல், காலத்தின் தேவைக்கு ஏற்ப பதவிப் பெயர்களை திருத்துதல், கடமைகளின் தன்மைக்கு ஏற்ப காணப்படும் பதவிகளை ஒருங்கிணைத்தல் போன்ற செயற்பாடுகளும் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய பணிகளில் அடங்கும். இப்பணிகளை மேற்கொள்வதற்காகத் திணைக்களத்திடமுள்ள தரவுத் தொகுதியும் ஆய்வுப் பிரிவின் ஊழியர் குழாமும் பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன. 2011 - 2014 காலப் பகுதியில் அரச துறையில் இல்லாதொழிக்கப்பட்ட பதவிகள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் அட்டவணை இல. 05 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இல. 05 பதவிகளை இல்லதொழித்தல்

| நிறுவனம் / வருடம் | இல்லாதொழிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 |
| அமைச்சுக்கள் | 32 | 95 | 179 | 421 |
| திணைக்களங்கள் | 512 | 1853 | 494 | 15 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 62 | 66 | 1 | 30 |
| நியதிச்சட்ட நிறுவனங்கள் | 66 | 8 | 33 | 0 |
| மொத்தம் | **672** | **2022** | **707** | **466** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

### 2.2.4 செயற்திட்டப் பணியாட்தொகுதிகளுக்கு அனுமதி வழங்குதலும் சம்பள முகாமையும்.

தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் நாட்டில் அமுலாக்கப்படும் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களைத் திட்டமிட்ட கால எல்லைகளுக்குள் பூர்த்தி செய்வதற்கு அவசியமான பணியாட்தொகுதிகளுக்கு அனுமதி வழங்குதல், அப்பதவிகளுக்கான சம்பளங்களைத் தீர்மானித்தல் என்பன 2007.04.05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இணங்க மேற்கொள்ளப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டில் இச்செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு குறித்த அபவிருத்திச் செயற்திட்டங்கள் அமுலாக்கப்படும் நிரல் அமைச்சுக்கள்/மாகாண சபைகள், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம், செயற்திட்ட முகாமை மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் என்பன இத்திணைக்களத்திற்கு சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்கின.

அட்டவணை இல. 06 செயற்திட்டப் பணியாட்தொகுதிகளுக்கு

அனுமதி வழங்கல் – 2014

| தொடர் இல | செயற்திட்டம் | பதவிகளின் எண். |
|---|---|---|
| 01 | கிவுல் ஒயா நீர்த்தேக்கச் செயற்திட்டம் | 12 |
| 02 | நீர் வள அபிவிருத்தி முதலீட்டுச் செயற்திட்டம் ( ஆ. அ.வ. நிதியம்) | 67 |
| 03 | மொரான நீர்த்தேக்கச் செயற்திட்டம் | 95 |
| 04 | காலநிலை தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்தற் செயற்திட்டம் | 847 |
| 05 | களுகல் ஒயா நீர்த்தேக்கச் செயற்திட்டம் | 26 |
| 06 | மொரகஹகந்த - களு கங்கைச் செயற்திட்டம் | 251 |
| 07 | உமா ஒயா பலநோக்கு அபிவிருத்திச் செயற்திட்டம் | 29 |
| 08 | இலங்கை நிலைபேறான உயிரியல் தண்டு எரிசக்தி உற்பத்தி மற்றும் உயிரியற் சக்தித் தொழில்நுட்பத்தைப் பரவலாக்கும் செயற்திட்டம் | 10 |
| 09 | இலங்கை ஆக்கிரப்பு உயிரினங்கள் நுழைவதையும் பரவுவதையும் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றல் விருத்திச் செயற்திட்ட முகாமை அலகிற்கான பதவிகளுக்கு அனுமதி வழங்கியமை | 06 |
| 10 | இலங்கை சமுதாய வன முகாமை நிகழ்ச்சி | 03 |
| 11 | இலங்கை மகாவலி விவசாயக் குடியேற்ற விவசாய சமுதாயங்களுக்கு தீமை பயக்கும் காலநிலை மாற்ற தாக்கத்தை பழக்கப்படுத்தும் செயற்திட்டம். | 15 |
| 12 | இலங்கை பௌதிக புவியியல் தொலைக்காட்சி டிஜிட்டல் மயப்படுத்துதல் | 27 |
| 13 | உபாயமுறை நகர அபிவிருத்திச் செயற்திட்டம் | 152 |
| 14 | உபாயமுறைப் பாதுகாப்புத் தொடர்பாடல் செயற்திட்டம் | 09 |
| 15 | அகுரேகொட பாதுகாப்புத் தலைமையகக் கட்டடத்தொகுதிச் செயற்திட்டம் | 2004 |
| 16 | இலங்கை சுனாமிக்குப் பின்னரா கிழக்கு மாகாண பங்கேற்பு கரையோர முகாமை மறுசீரமைப்பு மற்றும் நிலைபேறான முகாமை | 10 |
| 17 | பொலிஸ் தலைமையக மறுசீரமைப்புச் செயற்திட்டம் - மிரிஹானை | 13 |
| 18 | பொலிஸ் தகவல், தொடர்பாடல் முறைமைச் செயற்திட்டம் | 13 |
| 19 | கொழும்பு தலைநகரைச் சூழுவுள் பிரதேசத்திற்கான திண்மக் கழிவு முகாமைச் செயற்திட்டம் | 83 |
| 20 | விசேட செயற்திட்டம் - தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 104 |
| 21 | மீன்பிடித் துறைமுக மற்றும் நங்கூரமிடும் இடங்களின் அபிவிருத்தி | 17 |
| 22 | கிராமியப் பாலங்களின் நிர்மாணம் | 05 |
| 23 | தேசிய விவசாயத் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 14 |
| 24 | யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமுதாய அபிவிருத்தி முன்னிலை உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல் | 21 |
| 25 | புர நெகும செயற்திட்டம் | 35 |
| 26 | இலங்கை யுத்தப் பாதிப்புக்களுக்குத் தாக்குப் பிடிப்பதற்கான ஆற்றலைப் பலப்படுத்துதல் மற்றும் காலநிலை அபாய முகாமை அபிவிருத்தி | 13 |
| 27 | வருமான நிர்வாக முகாமை தகவல் முறைமை | 51 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

### 2.2.5 மாகாண சபைகளின் பதவியணி மீளாய்வு

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரம், பயனுறுதி, வினைத்திறன் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் பதவியணி மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு போதிய பதவியணி எண்ணிக்கைகள் தீர்மானிக்கப்பட்டன. எவ்வாறாயினும் புதிய நிறுவனங்கள் நிறுவப்படுதல், சேவை வழங்கல்கள் விரிவடைதல் என்பவற்றின் காரணமாக 2014 ஆம் ஆண்டிலும் புதிய பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டன.

# 3. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் முகாமை

முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்கத் துறையில் சம்பளம், மிகை ஊதியம், ஊக்குவிப்புத் திட்டங்கள், நலன்புரித் திட்டங்கள் மற்றும் வேறு ஊதியம் தொடர்பான தொகுதிகளை முகாமை செய்யும் பணியும் மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது. இச்செயற்பாட்டின் போது தேசிய சம்பள ஆணைக்குழு மற்றும் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் கவனத்திற்கொண்டு உரிய தீர்மானங்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றன. சம்பள மற்றும் ஊதியங்கள் தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகள் எழுகின்ற சந்தர்ப்பங்களில் அமைச்சுக்கள், திணைக்களங்களிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கும் செயற்பாடும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டிலும் 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கும் அதில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கும் இணங்கியதான 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைக்கு இணங்க நியதிச் சட்ட நிறுவனங்களின் மீள் கட்டமைப்புச் செயற்பாடுகளும் சம்பளங்களையும் படிகளையும் தீர்மானிக்கும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டது. இவற்றுடன் தொடர்புடைய வகையில் 2014 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் கீழே அட்டவணையில் காட்டப்படுள்ளன.

அட்டவணை இல. 07 முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைள் - 2014

| சுற்றறிக்கை இலக்கமும் திகதியும் | விடயம் |
|---|---|
| முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல. 01/2014 – 2014.01.06 | 2014 வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்க அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகள் மற்றும் கருத்திட்ட அலுவலர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படியினைத் திருத்துதல் |
| முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல. 02/2014 – 2014.02.11 | 2014 வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்க ஆராய்ச்சிக் கொடுப்பனவினைச் செலுத்துதல். |
| முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல. 03/2014 – 2014.03.31 | அரசாங்க சேவை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட மாகாண அரசாங்க சேவைக்கான பதவிகளுக்கு அனுமதி வழங்குதலும் பதவி வெற்றிடங்களை நிரப்புதலும் |
| முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல. 04/2014 – 2014.09.25 | அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரசாங்க வங்கிகள், முழுமையாக அரசுக்குச் சொந்தமாக கம்பனிகள் என்பவற்றின் உத்தியோகத்தர்களுக்கான அரச கருமமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதலும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைச் செலுத்துதலும். |
| முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல. 05/2014 – 2014.11.21 | அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகளுக்கு மிகை ஊதியம் செலுத்துதல். |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

# 4. ஆய்வுச் செயற்பாடுகள், தகவல் மற்றும் தரவுத் தொகுதி

## 4.1 ஆய்வுச் செயற்பாடுகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளில் அரசாங்க துறையின் ஊழியர் எண்ணிக்கைகளுடன் தொடர்புடைய மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துதல், அரசாங்க நிறுவனங்களை மீள் கட்டமைத்தல், போதிய ஊழியர் தொகையைப் பேணி வருதல், அரசாங்க துறையின் பதவியணி தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட அளவீடுகளையும் தரநியமங்களையும் உருவாக்குதல், சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய ஊதியங்கள் தொடர்பில் ஆய்வு செய்து அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல், தீர்மானங்களை வழங்குதல், சமகால அபிவிருத்தித் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு அரசாங்கத் துறையில் பல்வேறு சேவைகளுக்கான சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் சேவை நிபந்தனைகளையும் மீளாய்வு செய்கின்ற போது தேவையான அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல் போன்ற சந்தர்ப்பங்களில் திணைக்களம் ஏனைய நிறுவனங்களுடன் நெருக்கமான முறையில் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

இச்செயற்பாடுகளை கால தாமதமின்றியும் சரியாகவும் மேற்கொள்வதற்கு திணைக்களத்தில் வினைத்திறன் ஆய்வுப் பிரிவு ஒன்று காணப்படுவது அத்தியவசியமாகும். திணைக்களத்தின் பணிகளைப பயனுறுதிவாய்ந்த முறையில் மேற்கொள்கின்ற போது தேவைப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கான தகவல் சேகரிப்பு மற்றும் அத்தகவல்களைப் பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தல் என்பன ஆய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியமான பணிகளாகும். இதன் போது தேவையான விசாரணைகளுக்கான/ ஆய்வுகளுக்காக ஆய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் குறித்த நிறுவனங்களுக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பப்பபட்டு தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இதற்காக திணைக்களத்தின் ஆய்விப் பிரிவின் ஆற்றலை விரிவுபடுத்துவதற்கான தேவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதற்காக ஊழியர் குழாமொன்றை அடையாளம் கண்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 4.2 தகவல் மற்றும் தரவுத் தொகுதி

அரசாங்கத் துறையின் மனித வளம் தொடர்பான உண்மையான தகவல்களையும் தரவுகளையும் கொண்ட தரவுத் தளமொன்றைப் பேணி வருவது, கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறையில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அரச துறை பதவியணி மற்றும் சம்பள முகாமை மற்றும் ஆலோசனை தொடர்பான முன்னணி அரச நிறுவனம் என்ற வகையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அதிக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, முறையாகக் கணனிமயப்படுத்தப்பட்ட தரவுத் தளமொன்றின் தேவை உணரப்பட்டு 2012-2014 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அரசாங்க துறையில் அனுமதிக்கப்பட்ட மற்றும் உண்மையாகவுள்ள ஊழியர் தொகைகள் அடங்கிய தரவுத் தொகுதியொன்று ஏற்கனவே சிறப்பாக இயங்கி வருகின்றது.

அரசாங்கத் துறையின் மனித வளம் தொடர்பான உண்மையான எண்ணிக்கைத் தகவல்களை இந்த தரவுத் தளத்தின் ஊடாகப் பெறுவதற்கான வசதிகள் தற்போது செய்யப்பட்டுள்ளன. அதற்கிணங்க, சம்பளங்கள், சேவைகள், வகுதிகள் போன்ற பதவியணி வகைப்படுத்தல்கள் தொடர்பான சரியான தகவல் அறிக்கைகளை இத்தரவுத் தளத்தின் ஊடாகத் தேவையான போது இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிகளை மிகவும் இலகுவாக மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளதுடன் வழங்கப்படும் தரவுகளின் உண்மைத் தன்மையும் மேம்படுத்தப்பட்டுள்ளது. இத்தரவுத் தொகுதியில் உள்ளடங்கியுள்ள தகவல்களை இற்றைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 4.3 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைத்தல்

அரச துறையின் தாபனச் செயற்பாடுகள், சம்பளங்கள் மற்றும் படிகள் போன்ற இத்திணைக்களத்தின் விடயப் பரப்புக்குள் அடங்குகின்ற விடயங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைப்பதும் இத்திணைக்களத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். 2014 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் அவை அடங்கும் விடயப்பரப்பு என்பன தொடர்பான விபரங்கள் அட்டவணை 08 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இல. 08 அமைச்சரவைப் பத்திர அவதானிப்பு வகையீடு

| தொ இல | விடயம்/ துறை | விஞ்ஞாபன எண். |
|---|---|---|
| 01 | பதவிகளுக்கு நியமித்தல்/ஆட்சேர்ப்புச் செய்தல். | 81 |
| 02 | சேவையை நீடித்தல் | 123 |
| 03 | புதிய பதவிகளை உருவாக்குதல் | 07 |
| 04 | ஊதியம் | 48 |
| 05 | சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்,மற்றும் ஆட்சேர்ப்பு | 58 |
| 06 | ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் | 05 |
| 07 | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் | 62 |
| 08 | ஏனையவை | 65 |
| மொத்தம் | | 449 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2014 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் முன்வைக்கப்ப்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களில் நியமனங்கள் வழங்குதல், சேவையை நீடித்தல், ஊதியம் தொடர்பான விடயங்கள் என்பன முக்கியமாக அமைந்தன. அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை வழங்கியது தவிர, நாளாந்தம் நடைபெறும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பான அமைச்சரவை உப குழுக் கூட்டங்களிலும் திணைக்களம் பங்கேற்றது. 2004-2014 வரையான காலப் பகுதியில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட

அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் அட்டவணை இல. 09 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இல - 09 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைத்தல்

| வருடம் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை | 562 | 605 | 820 | 780 | 750 | 1272 | 598 | 1019 | 399 | 499 | 449 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 4.4 குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல், ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மற்றும் தொடர்பாடால்

அபிவிருத்தி மற்றும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் மாநாடுகளிலும் கலந்துரையாடல்களிலும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நிதி, திட்டமிடல் அமைச்ச மற்றும் திறைசேரி என்பவற்றைப் பிரதிநிதித்துவம் செய்து செயலூக்கத்துடன் பங்கேற்றனர்.

- தாபன விடயங்களுக்கான அமைச்சரவை உப குழு
- அமைச்சரவையினால் திணைக்களத்தின் பிரதிநிதிகள் அடங்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுக்கள்
- பொதுக் கணக்குகள் குழு (COPA)
- மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் மாநாடுகள்
- ஆளுநர் மாநாடுகள்
- மாகாண முதலமைச்சர்களின் மாநாடுகள்
- மாகாண பிரதம செயலாளர்களின் மாநாடுகள்
- தேசி சம்பள ஆணைக்குழுவின் கலந்துரையாடல்கள்
- செயற்திட்ட முன்னேற்ற மீளாய்வுக் குழுக்கள்
- நியதிச்சட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்
- பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்

மேலும், பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைச் சபை அங்கத்தவர்கள் என்ற வகையிலும் இத்திணைக்களத்ன் அங்கத்தவர்கள் பகேற்றனர். மேலும் அரசாங்க நிறுவனங்களின் பதவியணி முரண்பாடுகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் தொடர்ச்சியான முறையில் கலந்துரையாடல்களை நடாத்துதல். இவ்வாறு அரசாங்கத் துறையில் வினைத்திறன்மிக்க மனித வள முகாமை முறையொன்றை உருவாக்கும் நோக்கில் பயனுறுதிவாய்ந்த தொடர்பாடல் முறையொன்றைப் பேணி வருவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

# 5. தாபனப் பிரிவு

திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் நிறைவேற்றுவதற்குத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் திருப்தியை உச்ச அளவில் வைத்திருப்பது அவசியமாகும். திணைக்களத்தின் பௌதிச் சூழல், தொழிற் திருப்தியை அதிகரிக்கக்கூடிய நட்புறவான அலுவலகச் சூழல் என்பவற்றை உருவாக்குவதற்கும் ஒரு அணியாகச் செயற்படுவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் தாபனப் பிரிவு நடவடிக்கை எடுத்தது.

எவ்வாறாயினும் 2014 ஆம் ஆண்டில் திணைக்களத்திடம் காணப்பட்ட மனித மற்றும் பௌதிக வளங்களை உச்ச அளவில் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் பயன்படுத்துவதன் ஊடாக திணைக்களத்திடம் எதிர்பார்க்கப்படும் சேவைகளைத் தடங்கலின்றி நிறைவேற்றுவதும் சாத்தியமாகியது. 2014.12.31 ஆந் திகதி திணைக்களத்தின் மொத்தப் பதவியணி தொடர்பான தகவல்கள் அட்டவணை 10 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இல. 10 ஊழியர் குழாம் பற்றிய தகவல்கள் 2014.12.31 இல் உள்ளவாறு

| தொ இல | பதவி | அனுமதிக்கப்பட்ட எண். | தற்போதைய எண். | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | 00 |
| 02 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 02 | 01 | 01 |
| 03 | பணிப்பாளர் | 07 | 05 | 02 |
| 04 | பிரதி / உதவிப் பணிப்பாளர் | 10 | 06 | 04 |
| 05 | கணக்காளர் | 01 | 00 | 01 |
| 06 | உதவிப் பணிப்பாளர் (த.தொ.தொ.) | 01 | 00 | 01 |
| 07 | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | 00 |
| 08 | மொழிபெயர்ப்பாளர் | 01 | 01 | 00 |
| 09 | ஆராய்ச்சி உதவியாளர் | 07 | 05 | 02 |
| 10 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 | 03 | -01 |
| 11 | தகவல் தொ.நுட்ப உதவியாளர் | 01 | 01 | 00 |
| 12 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 29 | 26 | 03 |
| 13 | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 03 | 01 | 02 |
| 14 | ஆவண உதவியாளர் | 01 | 00 | 01 |
| 15 | சாரதி | 07 | 07 | 00 |
| 16 | அலுவலக உதவியாளர் | 07 | 07 | 00 |
|  | மொத்தம் | 81 | 65 | 16 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2014.12.31 ஆந் திகதியில உள்ளவாறான பாராளுமன்ற சேவையில் காணப்பட்ட ஊழியர் குழாம் கீழே 01 ஆம் இலக்கப் பட்டியலில் காட்டப்பட்டுள்ளது.

பட்டியல் - I 2014.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான ஊழியர் குழாம்

| தொடர் இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திருமதி என். கொடகந்த | பணிப்பாளர் நாயகம் |
| 2. | திரு. ஏ.ஆர். உடுவாவல | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 3. | திருமதி.டி.எச்.எஸ். புள்ளபெரும | பணிப்பாளர் |
| 4. | திரு. எஸ்.ஆர்.டபிள்யு.எம்.ஆர்.பீ. சத்குமார | பணிப்பாளர் |
| 5. | திருமதி. எஸ்.எச்.டி. களுதந்திரி | பணிப்பாளர் |
| 6. | திருமதி. எம்.கே.எஸ். ஜயசேன | பணிப்பாளர் |
| 7. | திருமதி எஸ்.என். அத்தநாயக | பணிப்பாளர் |
| 8. | திரு. எம்.ஏ. கருணாரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 9. | செல்வி சாமிகா மதுவன்தி | உதவிப் பணிப்பாளர் |
| 10. | திரு.டபிள்யு.எச்.ஜீ. கோசல | உதவிப் பணிப்பாளர் |
| 11. | செல்வி டபிள்யு.டி.சேபாலிகா | உதவிப் பணிப்பாளர் |
| 12. | செல்வி எம்.டி. அபேகுணவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 13. | திரு.சீ.ஜீ.கன்னங்கர | உதவிப் பணிப்பாளர் |
| 14. | திருமதி ஏ.ஆர்.பீ. தயானி ராஜபக்ஷ | நிர்வாக உத்தியோகத்தர் |
| 15. | திருமதி பீ.டி.டி. சமரசேகர | மொழிபெயர்ப்பாளர் |
| 16. | திரு. எம்.டபிளயு. ஜயந்த | ஆராய்ச்சி உதவியாளர் |
| 17. | திரு. ஆர்.கே.ஏ. கிறிஷான்த | ஆராய்ச்சி உதவியாளர் |
| 18. | திரு. எஸ்.எம்.டி. சமரவீர | ஆராய்ச்சி உதவியாளர் |
| 19. | திருமதி. எம்.எம்.ஏ.என். மல்போரு | ஆராய்ச்சி உதவியாளர் |
| 20. | திரு. பி.எம். சரத் | ஆராய்ச்சி உதவியாளர் |
| 21. | திரு. எம்.பீ.எஸ். சல்காது | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் |
| 22. | செல்வி ஈ.என். ரணசிங்ஹ | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 23. | திருமதி எஸ்.எஸ். அல்பிட்டியகே | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 24. | செல்வி எச்.எஸ்.ஹேனெபொலி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 25. | திருமதி எம்.டி.ஆர். ரஞ்சனீ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 26. | திருமதி. ஏ.எம்.எம். ஷியாமலீ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 27. | செல்வி ஜீ.என்.எச். அபயவர்தன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 28. | திரு. எம்.என்.எம் உஸாமா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 29. | திருமதி ஜே.ஏ.என. தேதுணு | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 30. | திருமதி எஸ்.எச்.எஸ் பவித்ரா | அரச முகாமைத்துவ உதவியாளர் |

| | | |
|---|---|---|
| 31. | செல்வி கே.ஐ. பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 32. | திருமதி கே.எஸ்.எஸ்.ஆர். செனெவிரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 33. | செல்வி எச்.எல். மங்கலிகா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 34. | திருமதி ஏ.எம்.எஸ்.எஸ்.கே. அரம்பத் | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 35. | திரு. ஆர்.ஏ. விஜேசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 36. | திரு எஸ்.எஸ். பியன்வில | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 37. | செல்வி ஏ.ஐ.எல். சிரிசேன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 38. | திரு. ஆர்.டபிள்யு.ஏ.எச். ராஜசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 39. | திரு. டபிள்யு.எம். சமிந்த குஸும் | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 40. | திரு. எல்.பீ. விதானகே | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 41. | திருமதி. எம்.எச்.என். கீதிகா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 42. | திருமதி. ஏ.கே.டி.பீ. சோமசிரி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 43. | செல்வி கே.டி.எம்.கே.டி. கப்பாகொட | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 44. | திரு. எல்.எச்.ஏ.பீ.எம். தயாரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 45. | திருமதி. எச்.பி.சீ.எம். தஸநாயக | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 46. | திருமதி ஜே.கே. சுதர்ஷனீ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 47. | திருமதி ரீ. ஷிராணீ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 48. | திருமதி டபிள்யு.சீ.ஏ. மேகலா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 49. | திரு. டபிள்யு.எஸ். சந்தருவன் | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 50. | திருமதி எம்.டி.பீ.எஸ்.ஆர். பதிரண | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 51. | செல்வி ஹிரந்தி தீகல | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் |
| 52. | திரு. ரீ.கே. ஷாம் நிஷாந்த | சாரதி |
| 53. | திரு.கே.பீ. சிரிசோம | சாரதி |
| 54. | திரு. ஜீ.பீ.டி.சீ.பீ. குணரத்ன | சாரதி |
| 55. | திரு. டி.எம். அஜித் சிசிர குமார | சாரதி |
| 56. | திரு. டி.உபாலி | சாரதி |
| 57. | திரு. பி.ஏ.சுனில் ஜயரத்ன | சாரதி |
| 58. | திரு பி.எ. ரஞ்சித் குமார | சாரதி |
| 59. | திரு. ரீ.ஜீ. ஆனந்த | அலுவலக உதவியாளர் |
| 60. | திரு. ஏ.என்.சீ.டி அல்விஸ் | அலுவலக உதவியாளர் |
| 61. | திரு.டபிள்யு. நந்தன | அலுவலக உதவியாளர் |
| 62. | திரு. சுசந்த பிரபாத் | அலுவலக உதவியாளர் |
| 63. | திரு. பீ.ஏ. திலகசிரி | அலுவலக உதவியாளர் |
| 64. | திரு. கமகே நிமல் | அலுவலக உதவியாளர் |
| 65. | திரு. பீ.டபிள்யு.ஏ.எல். நீல் அசங்க | அலுவலக உதவியாளர் |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.1 வயதுப் பிரிவின் அடிப்படையிலான பதவியணி வகைப்படுத்தல்

அட்டவணை 11 வயதுப் பிரிவின் அடிப்படையிலான பதவியணி வகைப்படுத்தல்

| தொடர் இல | வயதுப் பிரிவு | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 01 | 25 வயதுக்கு குறைந்தோர் | 1 | 0 |
| 02 | 26-35 | 10 | 8 |
| 03 | 36-45 | 15 | 11 |
| 04 | 46-50 | 5 | 10 |
| 05 | 51-55 | 3 | 1 |
| 06 | 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் | 1 | 0 |
| மொத்தம் | | **35** | **30** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.2 இடமாற்றங்கள்

அரசாங்க சேவையின் சாதாரண நடைமுறைகளுக்கு இணங்க திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டன. அதனடிப்படையில் 2014 ஆம் திணைக்களத்திலிருந்து 22 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றனர்.

பட்டியல் – II **2014** ஆண்டில் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள்

| தொடர் இல | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. எம்.ஜீ.லலித் ஆனந்த | பணிப்பாளர் | 2014.01.03 |
| 2. | திருமதி டபிள்யு.பீ.செவ்வந்தி | உதவிப் பணிப்பாளர் | 2014.10.13 |
| 3. | திருமதி டபிள்யு.எம். பிரியன்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 4. | திருமதி வை.என். களுஆரச்சி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 5. | திருமதி கே.பீ. பத்மகாந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 6. | திருமதி ஏ.எம்.குணரத்ன மனிகே | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 7. | திருமதி டி.பீ.எஸ். ஜயசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |

| | | | |
|---|---|---|---|
| 8. | திருமதி ரதுவடு ரமணீ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 9. | திருமதி ஜே.ஏ.ஜீ.டி.என். ஜயகொடி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 10. | திருமதி எச்.யூ.கே.ரத்நாயக | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 11. | திருமதி டபிள்யு.ஜே.பேருசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 12. | திருமதி. ஆர்.ஏ.ஐ. ரணதுங்க | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.22 |
| 13. | திருமதி வினீதா விதாரணகே | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.22 |
| 14. | திருமதி. ஜீ.எம். லியனகே | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.03.17 |
| 15. | திருமதி ஏ.பீ.டி.சீ.என். வாஸ் குணவர்தன | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.03.25 |
| 16. | திரு. டபிள்யு.டி.ஜே.யூ. சமராநாத | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.09.01 |
| 17. | திருமதி. எம்.எம். அளுத்கே | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.09.10 |
| 18. | திரு. அஜித் சமரவீர | சாரதி | 2014.01.08 |
| 19. | திரு. டீ.எம்.கே.பி. தசநாயக | சாரதி | 2014.02.06 |
| 20. | திரு. எம்.கே. யசவர்தன | சாரதி | 2014.04.28 |
| 21. | திரு. எம்.பீ.கே. குணவர்தன | சாரதி | 2014.06.13 |
| 22. | திரு. டபிள்யு.பீ.ஏ. ஹேமசிரி | அலுவலக உதவியாளர் | 2014.01.08 |

மூலம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2014 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று திணைக்களத்தில் சேவையில் இணைக்கப்பட்ட உத்தியோக்கதர்களின் எண்ணிக்கை 27 ஆகும். அவர்கள் பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டவர்களாவர்.

பட்டியல் – III 2014 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள்

| தொடர் இல | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| 1. | திருமதி.டி.எச்.எஸ். புள்ளபெரும | பணிப்பாளர் | 2014.09.01 |
| 2. | திருமதி. எஸ்.எச்.டி. களுதந்திரி | பணிப்பாளர் | 2014.10.14 |
| 3. | திரு.சீ.ஜீ. கன்னங்கர | உதவிப் பணிப்பாளர் | 2014.04.30 |
| 4. | செல்வி எம்.டி. அபேகுணவர்தன | உதவிப் பணிப்பாளர் | 2014.07.25 |
| 5. | திரு. டபிள்யு.எம். சமிந்த குஸூம் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 6. | திரு. எல்.பீ. விதானகே | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 7. | திரு. டபிள்யு.டி.ஜே.யூ. சமராநாத | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 8. | திருமதி. ஆர்.ஏ.ஐ. ரணதுங்க | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 9. | திருமதி வினீதா விதாரணகே | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.01 |
| 10. | திருமதி. எம்.எச்.என். கீதிகா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.06 |
| 11. | திருமதி. ஜீ.எம். லியனகே | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.08 |
| 12. | திருமதி. ஏ.கே.டி.பீ. சோமசிரி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.10 |
| 13. | செல்வி கே.டி.எம்.கே.டி. கப்பாகொட | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.10 |
| 14. | திரு. எல்.எச்.ஏ.பீ.எம். தயாரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.10 |
| 15. | திருமதி. எச்.பி.சீ.எம். தஸநாயக | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.13 |
| 16. | திருமதி ஜே.கே. சுதர்ஷனீ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.01.20 |
| 17. | திருமதி ரீ. ஷிராணீ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.02.25 |
| 18. | திருமதி டபிள்யு.சீ.ஏ. மேகலா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.03.05 |
| 19. | திரு. டபிள்யு.எஸ். சந்தருவன் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.03.12 |
| 20. | திருமதி எம்.டி.பீ.எஸ்.ஆர் பதிரண | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2014.09.02 |
| 21. | திரு. அஜித் சமரவீர | சாரதி | 2014.01.01 |

| | | | |
|---|---|---|---|
| 22. | திரு. எம்.பீ. ஜயசிரி குணவர்தன | சாரதி | 2014.04.24 |
| 23. | திரு. டி.எம். அஜித் சிசிர குமார | சாரதி | 2014.05.19 |
| 24. | திரு. டி.உபாலி | சாரதி | 2014.06.19 |
| 25. | திரு. பி.ஏ.சுனில் ஜயரத்ன | சாரதி | 2014.08.04 |
| 26. | திரு. ஏ.ஜீ. ரஞ்சித் குமார | சாரதி | 2014.11.05 |
| 27. | திரு. டபிள்யு.ஏ.எல். நீல் அசங்க | அலுவலக உதவியாளர் | 2014.04.23 |

மூலம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.3 பயிற்சி நிகழ்ச்சிகள்

### 5.3.1 உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

திணைக்கள உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை விருத்திக்காகப் பயிற்சி நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடாத்தும் நோக்கில் திணைக்களத்திற்கான வருடாந்த பயிற்சித் திட்டம் தயாரிக்கப்படுகின்றது. இந்த வருடாந்த பயிற்சித் திட்டத்தை தயாரிக்கும் போது திணைக்கள உத்தியோகத்தர்களின் தேவைகளும் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளும் கவனத்திற் கொள்ளப்படுகின்றன. அதனடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் திணைக்களத்தினுள் வழங்கப்பட்ட பயிற்சிகள் அட்டவணை இல. 12 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இல. 12 பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்

| தொடர் இல | துறை | பயிற்சி நிறுவனம் | பங்கேற்றோர் தொகை |
|---|---|---|---|
| 1. | சிறந்த ஊழியப் பயனுறுதியில் அலுவலக உதவியாளர்களின் வகிபாகம் | தேசிய ஊழிய ஆய்வு நிறுவனம் | 02 |
| 2. | தனிப்பட்ட கோவைகளைப் பேணி வருதல் | திறன் விருத்தி மன்றம் | 01 |
| 3. | புதிய அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சிநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 02 |
| 4. | SLIDA கணனி இயக்கச் சான்றிதழ் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 01 |
| 5. | ஊழியர் குழாத்தின் மனப்பாங்கு விருத்திக்கா செயலமர்வு | திறன் விருத்தி மன்றம் | 53 |
| 6. | கணக்கீட்டு ஏடுகளை முறையாகப் பராமரித்தல் | திறன் விருத்தி மன்றம் | 02 |

| | | | |
|---|---|---|---|
| 7. | விடுமுறை எழுதுநர்களின் வகிபாகமும் பொறுப்பும் | திறன் விருத்தி மன்றம் | 01 |
| 8. | பதவிநிலை அரசாங்க உத்தயோகத்தர்களுக்கான eGovernment வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 01 |
| 9. | 12 நாள் தமிழ்மொழிப் பயிற்சி நிகழ்ச்சி | தேசிய மொழி ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனம் | 01 |
| 10. | புதிய CIGAS பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்தல் | பொதுக் கணக்குகள் திணைக்களம் | 01 |
| 11. | அரசாங்க சேவையின் கணக்கீட்டு முறைகளும் நிதிக் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பங்கும் | திறன் விருத்தி மன்றம் | 01 |
| 12. | அரசாங்க சேவையின் தாபனச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் செயலொழுங்குவிதிகள் | திறன் விருத்தி மன்றம் | 03 |
| 13. | முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றை நடாத்துதல் | திறன் விருத்தி மன்றம் | 01 |
| 14. | கணக்கீட்டு எழுதுநர்களின் வகிபாகமும் பொறுப்பும் | திறன் விருத்தி மன்றம் | 01 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

### 5.3.2 வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கி அவர்களின் அனுபவங்களையும் விடய அறிவையும் விருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதனடிப்படையில் 06 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயற்சி வாய்ப்புக்கள் கிடைத்தன.

பட்டியல் – IV வெளிநாட்டுப பயிற்சிகள் - 2014

| தொடர் இல | பெயர் | பதவி | பெற்ற பயிற்சி | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | திரு. எம்.ஏ. கருணாரத்ன | உதவிப் பணிப் பாளர் | மாறிவரும் ஆசியாவுக்கான நவீனமயமாக்கல் கல்வ | பிலிப்பை னஸ் | 2014.09.09 முதல் 2014.09.10 வரை |
| 02 | செலவ் பீ.சீ. மடுவந்தி | உதவிப் பணிப் பாளர் | மனித வள அபிவிருத்திக்கான ஜப்பானிய உதவித்திட்டம் | ஜப்பான் | 2014.08.16 முதல் 2016.10.03 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | வரை |
| 03 | திரு.எஸ்.ஆர்.டபிள்யு.எம். ஆர்.பீ. சத்குமார | பணிப் பாளர் | பொருளாதார அபிவிருத்தி உபாயமுறைகள் | கொரியா | 2014.07.20 முதல் 2014.08.02 வரை |
| 04 | திரு.கே. ஆர். உடுவாவல | மேலதி கப் பணிப் பாளர் நாயகம் | சிரேஷ்ட உத்தியோகத்தர்க ளுக்கான தேசிய அரச நிர்வாகம் | ஜப்பான் | 2014.11.09 முதல் 2014.11.29 வரை |
| 05 | திரு.எஸ்.ஆர்.டபிள்யு.எம். ஆர்.பீ. சத்குமார | பணிப் பாளர் | இலங்கை நிருவாக சேவையின் தரம் 1 உத்தியோகத்தர்க ளுக்கான ஆற்றல் விருத்தி - இரண்டாவது வெளிநாட்டுப் பயணம் | மலேசியா | 2014.11.09 முதல் 2014.11.21 வரை |
| 06 | திருமதி. எஸ்.எச்.டி. களுதந்திரி | பணிப் பாளர் | ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பு வட்டமேசை கலந்துரையாடல்/ மாநாடு | பிலிப்பை னஸ் | 2014.11.17 முதல் 2014.11.18 வரை |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.4 வருடாந்த தபால்

2014 ஆம் ஆண்டில் திணைக்களத்துக்கு கிடைத்த கடிதங்களின் எண்ணிக்கை 7231 ஆகும். இக்கடிதங்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பானவையாகும். அரசாங்க நிறுவனங்களுக்கான புதிய பதவிகளை உருவாக்குதல், வெற்றிடங்களை நிரப்புதல் என்பவற்றுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி கோருதல், விளக்கங்கள் கோருதல், பொது நிர்வாகம் ஆகிய விடயத் தலைப்புக்கள் அவற்றில் முக்கியமானவையாகும்.

அட்டவணை - 13 **2014 ஆம் ஆண்டில் கிடைத்த கடிதங்களின் எண்ணிக்கை**

| தொடர் இல | மாதம் | கடிதங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஜனவரி | 415 |
| 02 | பெப்ரவரி | 489 |
| 03 | மார்ச் | 544 |
| 04 | ஏப்ரல் | 514 |
| 05 | மே | 493 |
| 06 | ஜூன் | 541 |
| 07 | ஜூலை | 836 |
| 08 | ஆகஸ்ட் | 700 |
| 09 | செப்டம்பர் | 657 |
| 10 | ஒக்டோபர் | 630 |
| 11 | நவம்பர் | 661 |
| 12 | டிசம்பர் | 751 |
| மொத்தம் | | **7231** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

# 6. நிதிப் பிரிவு

2014 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் தொழிற்பாட்டு நிகழ்ச்சியின் கீழ் மனித வள முகாமைச் செயற்திட்டத்திற்காக செலவுத் தலைப்பு 242 இற்கு ஒதுக்கப்பட்ட தொகை 38,820,000/- ரூபாவாகும். உண்மையாக ஏற்பட்ட செலவினம் ரூபா 35,281,255.04 ஆகும். அதனடிப்படையில் ஒதுக்கப்பட்ட தொகையில் 90.8% திணைக்களத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டது. நிதி முன்னேற்ற அறிக்கை வருமாறு.

அட்டவணை **14** நிதி முன்னேற்ற அறிக்கை

| செலவுத் தலைப்பு | | 2013 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு (நிறுத்தி வைக்கப்பட்ட தொகைகள் தவிர) (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) | செலவுகளின் சதவீதம் (%) | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) | செலவுகள் சதவீதம் (%) |
| மீளெழும் செலவுகள் | | **35,200,000.00** | **32,777,099.21** | **93** | **36,720,000.00** | **33,818,294.00** | **92.0** |
| ஆளணி வேதனாதிகள் | | 24,700,000.00 | 23,608,354.85 | 95 | 26,200,000.00 | 25,295,516.00 | 96.5 |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 17,000,000.00 | 1,525,9204.69 | 89 | 17,000,000.00 | 15,386,291.45 | 90.5 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறைக் காலச் சம்பளம் | 700,000.00 | 818,713.66 | 1.16 | 900,000.00 | 885,202.44 | 98.3 |
| 1003 | வேறு படிகள் | 7,000,000.00 | 7,530,436.50 | 1.07 | 9,025,000.00 | 9,024,021.83 | 99.9 |
| பிரயாணச் செலவுகள் | | **1,000,000.00** | **893,691.18** | **89** | **600,000.00** | **455,548.08** | **74.2** |
| 1101 | உள்நாட்டு | 200,000.00 | 128,445.00 | 64 | 150,000.00 | 108,062.50 | 72.0 |
| 1102 | வெளிநாட்டு | 800,000.00 | 765,246.18 | 95 | 450,000.00 | 347,485.58 | 77.2 |
| வழங்கல்கள் | | 4,000,000.00 | 3,784,035.79 | 94 | 4,660,000.00 | 4,211,755.06 | 90.3 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1201 | எழுது பொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 800,000.00 | 1,488,982.90 | 1.86 | 1,950,000.00 | 1,852,595.22 | 95.0 |
| 1202 | எரிபொருள் | 3,000,000.00 | 2,049,947.19 | 68 | 2,500,000.00 | 2,186,813.54 | 87.4 |
| 1203 | உணவு, பனங்க் மற்றும் சீருடை | 150,000.00 | 245,105.70 | 1.63 | 170,000.00 | 158,386.30 | 93.1 |
| 1205 | வேறு | 50,000.00 | 0.00 | 0 | 40,000.00 | 13,960.00 | 34.9 |
| **பராமரிப்புச் செலவுகள்** | | **1,100,000.00** | **1,028,196.64** | **93** | **1,200,000.00** | **779,398.28** | **64.9** |
| 1301 | வாகனங்கள் | 800,000.00 | 877,795.12 | 1.09 | 900,000.00 | 675,959.64 | 75.1 |
| 1302 | இயந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் | 300,000.00 | 150,401.52 | 50 | 300,000.00 | 103,438.64 | 34.4 |
| **சேவைகள்** | | **3,500,000.00** | **2,656,612.75** | **75** | **2,535,000.00** | **2,307,054.49** | **91.0** |
| 1401 | போக்குவரத்து | 1,500,000.00 | 1,060,440.00 | 70 | 775,000.00 | 630,044.51 | 81.3 |
| 1402 | தபால் மற்றும் தொலைத் தொடர்பு | 1,500,000.00 | 1,099,998.91 | 73 | 1,160,000.00 | 1,148,646.90 | 99.0 |
| 1405 | வேறு | 500,000.00 | 496,173.84 | 99 | 600,000.00 | 528,363,08 | 88.0 |
| **மாற்றல்கள்** | | **900,000.00** | **806,208.00** | **89** | **-** | **-** | **-** |
| 1506 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான ஆதனக் கடன் வட்டி | 900,000.00 | 806,208.00 | 89 | 800,000.00 | 769,022.03 | 96.1 |
| **மூலதனச் செலவுகள்** | | **15,200,000.00** | **3,491,068.95** | **22** | **2,100,000.00** | **1,462,961.38** | **69.6** |
| **மூலதனச் சொத்துக்களுக்கான புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | | **10,900,000.00** | **269,328.85** | **02** | **1,100,000.00** | **654,971.38** | **59.5** |
| 2001 | கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 10,000,000.00 | 0.00 | 0 | - | - | - |
| 2002 | இயந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் | 400,000.00 | 18,654 | 4 | 200,000.00 | 24,854.50 | 12.4 |
| 2003 | வாகனங்கள் | 500,000.00 | 250,674.85 | 50 | 900,000.00 | 630,116.88 | 70.0 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மூலதனச் சொத்துக்களின் கொள்ளல் | | **3,500,000.00** | **2,728,436.10** | **77** | **600,000.00** | **582,125.00** | **97.0** |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 3,000,000.00 | 2,728,436.10 | 90 | 600,000.00 | 582,125.00 | 97.0 |
| 2103 | இயந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் | 500,000.00 | 500,000.00 | 0 | - | - | - |
| திறன் விருத்தி | | **800,000.00** | **493,304.00** | **61** | **400,000.00** | **225,865.00** | **56.4** |
| 2401 | பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி | 800,000.00 | 493,304.00 | 61 | 400,000.00 | 225,865.00 | 56.4 |
| மொத்தம் | | **50,400,000.00** | **36,268,168.16** | **71** | **38,820,000.00** | **35,281,255.04** | **90.8** |

மூலம் : கணக்கீட்டுப் பிரிவு - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

